## இயல் - 1

# ஆய்வு அறிமுகம்

# ஆய்வு அறிமுகம்

## முன்னுரை

மாதவையர் தமிழின் முன்னோடி புனைகதை இலக்கியப் படைப்பாளிகளுள் ஒருவர். சி. சு. செல்லப்பா, க. நா. சுப்ரமண்யம் போன்ற விமர்சன முன்னோடிகள், மாதவையரின் புனைகதைகளின் பிரச்சாரப் பண்பினை இனங்கண்டு, அவற்றிற்கு இலக்கிய மதிப்பினை அளிக்க மறுத்துள்ளனர்[1]. அதே சமயம் சமகால இலக்கிய விமர்சகர்களான ஜெயமோகன், வேதசகாயகுமார் போன்றவர்கள் மாதவையரின் "கண்ணன் பெருந்தூது" கதையினையே வடிவச்சிறப்புப் பெற்ற முதல் தமிழ்ச் சிறுகதையாக மதிப்பிடுகின்றனர்[2]. மாதவையர் குறித்ததான விமர்சன மதிப்பீட்டில் தீர்வுகாணாத சிக்கலாக, இச்சிக்கல் அமைகிறது.

மாதவையர் பல்வேறு நோக்கங்களுக்காகப் புனைகதைகளைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பிட்ட ஒரு கதையை எழுதும்போது அவர் கொண்டிருந்த நோக்கத்தில், அவர் அடைந்துள்ள வெற்றியே, குறிப்பிட்ட அப்புனைகதையின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது. எனவே, மாதவையர் கொண்டிருந்த நோக்கங்களின் அடிப்படையில் அவர் புனைகதைகளை இனங்கண்டு, வேறுபடுத்தி ஆராய்வது காலத்தின் தேவையாக அமைகிறது.

மாதவையரின் படைப்புலகினைக் குறித்து முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகளும், முதுநிலை ஆய்வாளர் பட்டத்திற்கான ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. ராஜ்கௌதமனின் ஆய்வு,[3] நூல் வடிவம் பெற்றுள்ளது. மாதவையரின் படைப்புகளைக் குறித்த ஆய்வுகள், சமூகச் சீர்கேடுகள் குறித்ததான பிரச்சாரங்களை எழுத்தில் நிகழ்த்தியவர் என்னும் கோணத்திலேயே அமைந்துள்ளன. மாதவையரின் புனைகதை உலகம்

விரிந்தது. தமிழ் இலக்கியமரபு குறித்துத் தெளிவான அறிவு அவருக்கிருந்–துள்ளது. அவருடைய விமர்சனக் கட்டுரைகள் இதை உறுதிப்படுத்துகின்றன. எனவே, புதிய கோணத்தில் சமகாலப்பார்வையில் அவருடைய படைப்புலகை ஆராய்வதும் காலத்தின் தேவையாக அமைகிறது.

மாதவையரின் அனைத்துத் தமிழ்ப்படைப்புகளும் அவர் உயிருடன் வாழுங்காலத்தில் மாதவையர் என்னும் புனை பெயரிலேயே வெளியாகியுள்ளன.[4] எனினும், அவர் மறைந்த பின்பு அவை மாதவையா என்னும் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளன. அவர் ஆசிரியராகத் திகழ்ந்த “தமிழர் நேசன்”, “பஞ்சாமிர்தம்” என்னும் இரு இதழ்களும் ஆசிரியர் பெயரை மாதவையர் என்றே குறித்துள்ளன. ஆங்கிலத்தில் மட்டுமே ‘மாதவையா’ எனக் கையெழுத்திடும் வழக்கம் அவரிடம் இருந்துள்ளது. மாதவையர் கன்னட பார்ப்பனர் வகுப்பினைச் சார்ந்தவர். ஐயா என்பதே பொருத்தமானது என்னும் விவாதத்தை ஏற்க இயலாது.[5] ஒரு படைப்பாளி வாழுங்காலத்தில் பயன்படுத்திய பெயரிலேயே அவர் படைப்புகளை அடையாளப்படுத்துவதே முறையானது. எனவே, “மாதவையா” எனப் பின்னால் அடையாளப்படுத்தப்–பட்ட அவர் படைப்புலகை அவர் அடையாளப்படுத்திய “மாதவையர்” என்னும் பெயரிலேயே இந்த ஆய்வு அடையாளப்படுத்துகிறது. இதனை மாதவையருக்குச் செய்யும் நன்றிக்கடனாகவும் கொள்ளுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

“மாதவையர் புனைகதைகள்–ஓர் ஆய்வு” என்பது ஆய்வுத்தலைப்பாக அமைகிறது. மாதவையரின் புனைகதைகளை, அவர் கொண்டிருந்த நோக்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி அதில் அவரடைந்த வெற்றி மதிப்பிடப்படுகிறது.

## ஆய்வுப் பொருள்

இலக்கிய மரபில் சாதனை நிகழ்த்திய படைப்பாளியைக் குறித்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும், வெவ்வேறு கோணங்களில் ஆராய்வது அவசியமாகிறது. இவ்வாறு ஆராய்வதின் மூலமே மரபின் எதிர்கால வளர்ச்சியை ஊக்குவிக்க இயலும். மாதவையரின் படைப்புலகைச் சமகாலப் பார்வையில் ஆராய்வது காலத்தின் கட்டாயமாகிறது. புனைகதை என்னும் வடிவம் மிகப்பழைமையானது. இலக்கியக் கதைகள் அதில் ஒரு பிரிவு மட்டுமே. மாதவையரின் புனைகதைஉலகம் அதன் எல்லா வகைகளையும் உள்ளடக்கியது. மாதவையர் கருத்துப் பரிமாற்றத்திற்கான மொழியாகவே புனைகதைகளைக் கையாண்டுள்ளார். மாதவையரின் நோக்கத்தினை இனங்கண்டு, அதனடிப்படையில் அவர் புனைகதைகளை ஆராயும் போக்கு இன்னமும் தமிழில் தோற்றம் கொள்ளவில்லை. ஆய்வாளர், மாதவையரின் படைப்புலகம் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்னும் காரணத்தில் இவ்வாய்வுப்பொருள் தேர்வு செய்யப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

மாதவையரின் புனைகதைகளை, அவை கொண்டுள்ள நோக்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி, நோக்கத்தை நிறைவு செய்வதில் அவை பெறும் வெற்றியை மதிப்பிடுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## ஆதாரங்கள்

ஆய்வுக்கு அடிப்படையாக அமைவது ஆதாரங்கள் ஆகும். "மாதவையரின் புனைகதைகள் ஓர் ஆய்வு" என்னும் இந்த ஆய்வில் பயன்படும் ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என இருவகைப்படும்.

## முதன்மை ஆதாரங்கள்

மாதவையர் எழுதிய புனைகதைகள் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. இதழ்களில் வெளியாகி இன்னும் நூல் வடிவம் காணாத புனைகதைகள் இதழ்களிலிருந்து பெறப்பட்டு ஆய்விற்குள்ளாக்கப்பட்டுள்ளன.

## துணைமை ஆதாரங்கள்

மாதவையர் குறித்ததான ஆய்வேடுகள், நூல்கள், விமர்சனக் கட்டுரைகள் ஆகியன துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

## கருதுகோள்கள்

"மாதவையரின் புனைகதைகள் ஓர் ஆய்வு" என்னும் இவ்வாய்வில் பின்வரும் நிலையில் கருது கோள்கள் இடம் பெறுகின்றன.

1. புனைகதை என்னும் வடிவம் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டதாக அமைகிறது. நோக்கத்தின் அடிப்படையில் அதன் வடிவ அமைப்பு அமைகிறது.

2. இலக்கியப் புனைகதைகள், புனைகதை வடிவத்தின் ஒரு வகையாக அமைகிறது.

3. ஓர் ஆளுமை வேறுபட்ட இரு முகங்களைக் கொண்டதாக அமைய இயலும்.

## ஆய்வு மொழிநடை

ஆய்வேட்டில் இயன்றவரை தூயதமிழ் நடையே கையாளப்பட்டுள்ளது. படைப்புகளின் பெயர்கள், படைப்பில் இடம் பெறும் பெயர்கள், தொடர்கள், திறனாய்வுக் கட்டுரைகளில் இடம் பெறும் கலைச்சொற்கள் ஆகியன எவ்வித மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படாமல் அப்படியே பயன்படுத்தப்படுகின்றன.

## ஆய்வுக் குறியீடுகள்

குறிப்புகளில் ஆங்கில நூல்கள் இடம் பெறும்போது சுருக்கக் குறியீடுகளைக் கையாள வேண்டிய நிலை ஏற்படின், ஆங்கிலச் சுருக்கக் குறியீடுகளும், தமிழ் நூல்களுக்குத் தமிழ்ச் சுருக்கக் குறியீடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு அணுகுமுறை

அகமதிப்பாய்வு (Intrinsic), புறமதிப்பாய்வு (Extrinsic) என்னும் இருவகை ஆய்வு நெறிமுறைகளில் இவ்வாய்வு அகமதிப்பாய்வாக அமைகிறது. மாதவையாவின் படைப்புகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்படுகிறது. ஏனைய தரவுகள், இப்படைப்புகளைப் புரிந்துகொள்ள மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வில் பெரும்பாலும் பகுப்பாய்வு

முறையே கையாளப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் மட்டும் சிறுபான்மையாக விளக்கமுறை ஆய்வுநெறியும், வரலாற்றுமுறை ஆய்வு நெறியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு அமைப்பு

"மாதவையரின் புனைகதைகள் ஓர் ஆய்வு" என்னும் இந்த ஆய்வு, ஏழு இயல்களைக் கொண்டதாக அமைகிறது. ***முதல் இயல்,*** ஆய்வு அறிமுகமாகிறது. இவ்வியலில் ஆய்வின் நோக்கம், ஆய்விற்கான ஆதாரங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வின் அமைப்பு இவை குறித்ததான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

***இரண்டாவது இயல்,*** தமிழ்ப் புனைகதை மரபின் தோற்றமும் வளர்ச்சியும் என்பதாகும். இவ்வியலில், தமிழ்ப் புனைகதைகள் பன்முக நோக்கங்களைக் கொண்டனவாக அமைவது நிறுவப்படுகிறது. தமிழ் வாய்மொழி, எழுத்துமொழி, கதைமரபுகளுக்கிடையிலான உறவு ஆகியவை ஆராயப்படுகின்றன. தமிழ் இதழ்களின் வளர்ச்சிக்கும், புனைகதை வளர்ச்சிக்குமிடையிலான உறவும் ஆராயப்படுகிறது. சமூக விழிப்புணர்வு, புனைகதை வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது நிறுவப்படுகிறது. தமிழிலக்கியக் கதைகளின் தோற்றமும், வளர்ச்சியும் ஆராயப்படுகிறது. பொழுதுபோக்குப் புனைகதைகளின் தோற்றத்திற்கான காரணம் விளக்கப்படுகிறது.

கருத்துப்பரிமாற்றத்திற்கான புனைகதைகள் என்பது ***மூன்றாவது இயலாக*** அமைகிறது. மாதவையர், கருத்துப்பரிமாற்றத்திற்குப் புனை கதைகளைப் பயன்படுத்தியவர்களுள் முதன்மையானவர். மாதவையரின் ஆளுமை, சிந்தனையாளர், படைப்பாளி என்னும் இரு முகங்களைக்

கொண்டது. கருத்துப்பரிமாற்றத்திற்கான கதைகள் சிந்தனையாளர் என்னும் முகத்தின் வெளிப்பாடாக அமைவது நிறுவப்படுகிறது. கருத்துப் பரிமாற்றத்திற்கான கதைகள் உணர்த்தும் சமூகச் சிக்கல்களை ஆராய்வதன் மூலம் சமகாலச் சமூகம் மீதான மாதவையாரின் சிந்தனை இனங்காணப்படுகிறது. மாதவையாரின் புனைகதைகள், சமூகம், கல்வி, அரசியல், என்னும் மூன்று தளத்தில் இயங்குவது நிறுவப்படுகிறது. கருத்துப்பரிமாற்றத்திற்கான கதைகளின் அமைப்பு ஆராயப்பட்டு, கருத்துப்பரிமாற்றம் என்னும் நோக்கத்திற்கு இசைவாக அமைப்பு அமைவது நிறுவப்படுகிறது.

*நான்காவது இயல்,* மாதவையரும் இராமாயணமும் என்பதாக அமைகிறது. மாதவையர், இராமாயணம் மீதான காலம் சார்ந்த தன் வாசிப்பைப் புனைகதை வடிவில் நிகழ்த்தியுள்ளது ஆராய்ந்து கண்டடையப் படுகிறது. 19, 20–ஆம் நூற்றாண்டுகளில் இராமாயணம் அரசியல் சார்ந்த வாசிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது ஆராயப்படுகிறது. மாதவையர் இன்றுள்ள சாதி அவலங்களுக்கான வேரை இராமாயண உள்ளுறையில் காண மறுப்பது ஆய்விற்குள்ளாக்கப்படுகிறது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் அரசியல் சார்ந்த வாசிப்பை மறுத்து ஆதிக்கசாதி அரசியல் அடிப்படையிலான வாசிப்பை மாதவையர் புனைகதை வடிவில் நிகழ்த்துவது உறுதி செய்யப்படுகிறது.

'புனைவு வடிவிலான வரலாற்றுரைகள்' என்னும் *ஐந்தாவது இயலில்,* கடந்தகால வரலாற்றைச் சமகாலப் பார்வைக்குட்படுத்தி மதிப்பிடுவதைப் புனைகதை வடிவில் மாதவையர் நிகழ்த்தியுள்ளது, ஆய்விற்குள்ளாக்கப்படுகிறது. புனைகதையும், வரலாறும் வாழ்வின் மீது

அக்கரை கொண்ட இருதுறைகளாக அமைகின்றன. வரலாறு மீதான மாதவையரின் மதிப்பீடு சமகால அரசியல் மீதான மதிப்பீடாகவும் திகழ்வது நிறுவப்படுகிறது. சமகால அரசியலில் விடுதலைக்கான கிளர்ச்சியை ஆதிக்கத்திற்கான போராக மாதவையர் மதிப்பிடுவது புனைவுவடிவிலான வரலாற்றுரைகளை ஆராய்வதன் மூலம் நிறுவப்படுகிறது. புனைவுவடிவிலான வரலாற்றுரைகள் அவற்றின் நோக்கத்திற்கிசைவான வடிவ அமைப்பினைக் கொண்டிருப்பது நிறுவப்படுகிறது.

மாதவையரின் இலக்கியக்கதைகள் என்னும் *ஆறாவது இயலில்,* மாதவையரின் இலக்கியக்கதைகள் ஆய்வுக்குள்ளாக்கப்படுகின்றன. மாதவையர் வடிவ உணர்வுக் கொண்ட படைப்பாளி என்பது ஆராய்ந்து கண்டடையப்படுகின்றது. மாதவையர் நாவலின் மனிதர்கள் தன்னிச்சையாக வாழ்வை எதிர்கொள்ளும் படைப்புலக மனிதர்களாக இயங்குவது இனம் காணப்பட்டு, மாதவையர் நாவல்கள் இலக்கியக் கதைகளாக உறுதி செய்யப்படுகின்றன. நாவல்களில் உருக்கொள்ளும் சமூகச் சித்திரம் வாழ்வின் மீதான அவர் பார்வையைத் துலக்கி, படைப்பாளியாக அவரை உறுதி செய்வது நிறுவப்படுகிறது. நாவல்களின் வடிவம் ஆராயப்பட்டு, வடிவ உணர்வுக் கொண்ட படைப்பாளியாக அவர் திகழ்வது உறுதி செய்யப்படுகிறது. மாதவையர் வடிவச்சிறப்புக் கொண்ட முதல் சிறுகதையைப் படைத்தவர் என்பதும் நிறுவப்படுகிறது.

*ஏழாவது இயல்,* முடிவுரையாக அமைகிறது. இவ்வியலில் இயல்களில் கண்ட முடிவுகள் தொகுத்தளிக்கப்படுகின்றன. பின்னிணைப்பில் துணை நூற்பட்டியல் இடம் பெறுகின்றது.

# அடிக்குறிப்புகள்

1. 1959 ஜனவரி மாத எழுத்து இதழில் க.நா. சுப்ரமண்யம் 'சிறந்த தமிழ்ச் சிறுகதைகள் ஒரு தொகுப்புக்கான சில குறிப்புகள்' என்னும் கட்டுரையில் மாதவையரை ஒரு பிரச்சாரகர் என்றே மதிப்பீடு செய்துள்ளார்.

2. சொல் புதிது ஜூலை-செப்டம்பர் இதழில் மாதவையரின் கண்ணன் பெருந்தூது கதை 'தமிழின் முதல் சிறுகதை' என்னும் தலைப்பில் மறுவெளியீடு பெற்றுள்ளது. 'வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம்' போலல்லாமல் இது தமிழ் வாழ்விலிருந்தே கிளர்ந்தெழுந்த வடிவமாக அமைகிறது" என வேதசகாயகுமார் மறுமதிப்பீடு செய்துள்ளார்.

3. ராஜ் கௌதமன், 'அ. மாதவையா வாழ்வும் படைப்பும்'.

4. வாழுங்காலத்தில் வெளியான மாதவையர் நூல்களின் முதற்பக்கங்களின் ஒளிப்பட நகல்கள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் நூலாசிரியர் பெயர் மாதவையர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

5. சொல் புதிது 9-வது இதழ் 19-வது பக்கத்தில் 'அ. மாதவையா என்பதே கதையாசிரியரின் சரியான பெயர். செஞ்சையா, நாகையா, ஆதிசேஷய்யா போன்ற பெயர்கள் புழங்கும் தெலுங்கு பிராமண குலத்தைச் சார்ந்தவர் அவர்' என்னும் கருத்தினை தியோடர் பாஸ்கரன் .சு முன் வைத்துள்ளார். ஆனால் தமிழர் நேசன் ஸித்தார்த்த ஐப்பசி இதழில் (1919-20) P.N. அப்புஸ்வாமி ஐயரின் தந்தையும் தமது தமையனாருமான A.N. நாராயண ஐயரின் மறைவிற்கு இரங்கற் பதிகம் மாதவையரால் எழுதப்பட்டுள்ளது. தனது தமையனார் பெயரில் சாதி அடையாளமாக ஐயர் என்பதனையே இணைத்துள்ளார் தன் பெயரிலும் ஐயர் என்னும் சாதி அடையாளத்தைக் கொண்டுள்ளார். எனவே தியோடர் பாஸ்கரன் கூற்று பொருந்தாததாக அமைகிறது. சொல் புதிது ஏழாவது இதழ் 79 ஆம் பக்கத்தில் 'மாதவையர் மாதவையா ஆனது தமிழில் நீண்ட காலமாய்த் தொடர்ந்து வரும் எழுத்துப் பிழை' என வேதசகாயகுமார் குறிப்பிட்டுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டியதாக அமைகிறது.